DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE SPECIAL MAGISTRATE, KARUR

C.C. No. 114/2020

Prosecution PW 9

Deposition of Witness for Defence

Court

Name : சண்முக சுந்தரம்

Father's Name : பழனிச்சாமி

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 25.03.2026.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மதுரை மாவட்டம், உசிலம்பட்டி கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019 ம் ஆண்டு தாந்தோணிமலை காவல் நிலைய கு.எண்.275/2019 ச.பி. 392 இதச வழக்கினை அப்போதைய பசுபதிபாளையம் வட்ட ஆய்வாளர் செந்தில் குமார் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு

எடுத்துக் கொண்டு சம்பவ இடத்திற்கு 07.09.2019 ம் தேதி 23.30 மணிக்கு சம்பவ இடம் சென்று பார்வையிட்டும், சாட்சிகள் ராம்குமார், பூபதி ஆகியோர்கள் முன்னிலையில் அங்கிருந்த மின் கம்ப வெளிச்சத்தில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.11,12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறகு சாட்சிகள் செல்லம்மாள், ஆறுமுகம், கேசவன், ஜெகந்நாதன், கோபால கிருஷ்ணன், நகுல்சாமி, ரகுநாதன், ராம்குமார், பூபதி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

2. சம்பவ இடத்தில் எதிரி விட்டுச் சென்ற செல்போன் எண் 9047091198 என்ற செல்போனின் உரிமையாளர் முகவரியை சேகரித்ததில் அன்பு செல்வி, எஸ்சி தெரு, பல்லாபாளையம், கரூர் மாவட்டம் என்றிருந்தது. அந்த செல்போனை அன்பு செல்வி கணவர் செல்லதுரை பயன்படுத்தி வருவதும் அன்றைய புலன் விசாரணை அதிகாரிக்கு தெரிய வந்துள்ளது. அந்த செல்போனை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். 29.09.2019 ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி செந்தில் குமார் பணி மாறுதலில் சென்றதால் இவ்வழக்கை தொடர் புலன் விசாரணைக்கு என்னிடம் ஒப்படைத்ததை நான் 30.09.2019 ம் தேதி வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு படித்து பார்த்து சம்பவ இடத்தை பார்த்தும், முந்தைய புலன் விசாரணை அதிகாரி விசாரித்த சாட்சிகள் அவரிடம் சொன்னது போலவே என்னிடமும் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

3. இவ்வழக்கின் எதிரி செல்லத்துரை என்பவரை தனிப்டை அமைத்து தேடிவவந்த நிலையில் 15.11.2019 ம் தேதி நான், சிறப்பு உதவி ஆய்வாளர் எழிலரசன், த.கா. சசிக்குமார், மு.நி.கா. தனபால் ஆகியோருடன் எதிரியை கண்டுபிடிக்கும்பொருட்டு ராயனூர் – கோடங்கிப்பட்டி ரோடு தேசிய நெடுஞ்சாலை தரைப்பாலத்திற்கு அருகே வாகன சோதனை செய்து கொண்டிருந்தபோது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி TN 42 AZ 8589 என்ற HONDA SHINE BLACK COLOR இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக வந்தவர் போலிசாரை கண்டவுடன் தப்பிக்க முயன்றவரை பிடித்து சந்தேகத்தில் விசாரிக்க பெயர் விலாசத்தை முன்னுக்கு பின் முரணாக கூறியவர் பின்னர் தனது

பெயர் செல்லத்துரை (எ) அன்பு செல்வன் என்றும் கூறியவரை அவர் ஓட்டி வந்த வாகனத்தை பற்றி விசாரிக்க கடந்த 24.09.2019ம் தேதி மதியம் 03.00 மணியளவில் திருப்பூர் மாவட்டம் தாசநாயக்கன்பப்டடியில் ஒரு வீட்டின் முன்பிருந்து வாகனத்தை திருடிக் கொண்டு வந்ததை ஒப்புக்கொண்டார்.

4. மேலும் அவரை சோதனை செய்தபோது அவரது பேண்ட் பாக்கெட்டில் ஒரு தங்க தாலிக் கொடி இருந்தது. அதை பற்றி விசாரிக்க கடந்த 07.09.2019ம் தேதி இரவு 08.30 மணியளவில் தாந்தோணிமலை அருகம்பாளையம் வந்தபோது, ஒரு வீட்டின் முன்பு நின்றிருந்த வயதான அம்மாவிடம் கழுத்தில் அணிந்திருந்த தாலிக் கொடியை கொள்ளையடித்ததாகவும் அது சுமார் 7 பவுன் இருக்கும் என்றும் கூறினார். எனவே எதிரி செல்லத்துரையை தாந்தோணிமலை காவல் நிலைய கு.எண். .275/2019 ச.பி. 392 இதச வழக்கில் 08.30 மணிக்கு காரணத்தை கூறி சாட்சிகள் பூபதி, சுப்பிரமணி ஆகியோர் முன்னிலையில் கைது செய்தும், **எதிரி செல்லத்துரை என்பவர் எந்தவித அச்சுறுத்தலோ ஆசை வார்த்தையுமின்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை 08.35 முதல் சாட்சிகள் பூபதி, சுப்பிரமணி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மொத்தம் 22 வழக்குகளில் திருட்டு மற்றும் கொள்ளையடித்தல் குற்றத்தை செய்துள்ளதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி தன்னை கூட்டி சென்றால் சம்பவ இடத்தை காட்டுவதாக கூறினார். பிறகு, 10.45 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் தாந்தோணிமலை காவல் நிலைய கு.எண். .275/2019 ச.பி. 392 இதச வழக்கில் கொள்ளையடிக்கப்பட்ட 7 பவுன் தாலிக் கொடியை எடுத்து ஆஜர்படுத்தியதை மகசரில் கைப்பற்றினேன்.** ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளும் எதிரியும் கையொப்பம் செய்தனர். நானும் கையொப்பம் செய்தேன்.

5. பிறகு அங்கிருந்த TN 42 AZ 8589 என்ற HONDA SHINE BLACK COLOR இருசக்கர வாகனத்தையும் 11.15 மணியளவில் மகசரில் கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் மகசர்கள் அ.சா.ஆ.13,14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறகு எதிரி சம்பவ இடத்தை காட்டினார். சாட்சிகள் பூபதி, சுப்பிரமணி, மாரியம்மாள் ஆகியோர்களை விசாரணை

செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி மற்ற இடங்களில் வழிப்பறி செய்த சொத்துக்களை என்னை அழைத்துச் சென்று எடுத்து ஆஜர்படுத்தியயை மகசரில் கைப்பற்றினேன். பிறகு 17.15 மணிக்கு எதிரி கைப்பற்றிய சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரியை பாரா காவலர் வசம் ஒப்புவித்தேன். சாட்சிகள் எழிலரசன் சசிக்குமார், தனபால் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 21.00 மணிக்கு எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தங்க தாலிக் கொடியை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**6.** இவ்வழக்கின் தொடர் புலன் விசாரணையாக 18.11.2019 ம் தேதி அடையாள அணிவகுப்பு நடத்த சிஜேஎம் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 19.11.2019 ம் தேதி இவ்வழக்கின் புகார்தாரர் செல்லம்மாள் என்பவர் நிலையம் வந்து இவ்வழக்கில் கைப்பற்றியிருந்த தாலிக் கொடியை தனது தாலிக் கொடிதான் என்று அடையாளம் காட்டினார். அவரை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரி செல்லத்துரை என்பவருக்கு 27.11.2019 ம் தேதி அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. **அடையாள அணிவகுப்பு அறிக்கை நீ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட கைப்பற்றப்பட்ட சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்து 28.10.2019 ம் தேதி ஆர்பி எண் 350/19 பெற்றேன். இவ்வழக்கின் தொடர் புலன் விசாரணையாக 18.02.2020 ம் தேதி சாட்சிகள் த.கா. லலிதா, த.கா. 1048 கற்பகவள்ளி, மு.நி.கா. ஜெயவாணி, உதவி ஆய்வாளர் சத்யபிரியா, இவ்வழக்கில் செல்போன் எண் சம்மந்தமான கால் விவரங்கள், முகவரி மற்றும் 65 பி சர்டிபிகேட் சான்று வழங்கிய கார்த்திக் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தொடர்ந்து த.கா.1432 என்.மணிமுத்து, வெள்ளகோவில் காவல் நிலையம் என்பவரை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி செல்லத்துரை என்பவர் மீது ச.பி.392 இதசவின்படி குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

**குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் கால அவகாசம் கோரியதால் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி விசாரணை முடிக்கப்பட்டது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**